ஊராட்சி மன்ற தலைவர் எல்லைநாயக்கன்பட்டி ஊராட்சி அவர்களின் நடவடிக்கைகள்

முன்னிலை: திருமதி. வெ.மங்களசுந்தரி

அனுமதி எண்: **01/2024-2025** நாள்: 02-04-2024

பொருள்: மனைப்பிரிவு அனுமதி - கருங்குளம் ஊராட்சி ஒன்றியம்- எல்லைநாயக்கன்பட்டி ஊராட்சி சர்வே எண்: 233/2A, 233/2B, 233/3A, 233/3B, 234/1, 234/2A, -ல் அமைக்கப்பட்டுள்ள மனைப்பிரிவிற்கு அனுமதியளித்து உத்தரவிடல்

பார்வை:

1) திரு. C.கிருபாகரன், த/பெ. செல்லத்துரை என்பவரது கடிதம் நாள்:*16-02-2024*
2) நகர் ஊரமைப்புத்துறை இணை இயக்குநர் (பொறுப்பு) தூத்துக்குடி அலுவலகம் அவர்களின் ந.க.எண் *19799/2020* அனுமதி எண்: ம.வ.தூ.மா.அ: *19113/UD4(3)2017-1,* நாள்:*30-08 2017* தான பத்திர எண்: *545/2024* நாள்: *28/02/2024*
3) எல்லைநாயக்கன்பட்டி ஊராட்சி தீர்மானம் எண்: 84. நாள் *29-02-2024*

உத்தரவு:-

பார்வை-1-ல் கண்ட மனுதாரர் கருங்குளம் ஊராட்சி ஒன்றியம்- எல்லைநாயக்கன்பட்டி ஊராட்சி சர்வே எண்: 233/2A, 233/2B, 233/3A, 233/3B, 234/1, 234/2A-ல் அமைக்கபட்டுள்ள மனைப்பிரிவிற்கு அனுமதி கோரியுள்ளார்.

பார்வை-2-ல் காணும் கடிதத்தின்படி மனைப்பிரிவு ஒப்புதல் வழங்க உரிய தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

பார்வை-3-ல் கண்டபடி மனுதாரர் திரு. C.கிருபாகரன், த/பெ.செல்லத்துரை என்பவர் மனைபிரிவு அரசு விதிகளின் படி சாலை வசதிகளும் முறையாக ஏற்படுத்தி உள்ளார். எனவே எல்லைநாயக்கன்பட்டி ஊராட்சி சர்வே எண்: ***233/2A, 233/2B, 233/3A, 233/3B, 234/1, 234/2A- 22500*** ச.மீ. பரப்பளவில் உள்ள மனைப்பிரிவிற்கு கீழ்க்கண்ட நிபந்தனைக்குட்பட்டு மனைபிரிவு அனுமதி வழங்கப்படுகிறது.

நிபந்தனைகள்

1. அரசாணை எண் 255 ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை நாள்: 18-08-1997ன்படி அரசாணையில் கண்ட நிபந்தனைகளைக் கண்டிப்பாக கடைபிடிக்க வேண்டும்.
2. நில உரிமை சம்பந்தமாக ஏதேனும் வில்லங்கங்கள் ஏற்பட்டால் எவ்வித நிபந்தனையுமின்றி மனைப்பிரிவு உத்தரவு ரத்து செய்யப்படும்.
3. சாலை மற்றும் ஓடையினை ஆக்கிரமிப்பு செய்யக்கூடாது.

4. மனைப்பிரிவுகளில் கட்டிடங்கள் கட்டும்போது அரசு விதிகளை தவறாது கடைபிடிக்க வேண்டும்.
5. சாலை ஓரங்களில் அபிவிருத்தி பணிகள் மேற்கொள்ள எவ்வித தடங்கலும் ஏற்படுத்த கூடாது.
6. அனுமதிக்கப்பட்ட மனைபிரிவுகளைத் தவிர கூடுதலாக மனைபிரிவோ மாற்றமோ ஏற்படுத்தக்கூடாது.
7. அருகில் உள்ள ஓடையின் குறுக்கே பாலமோ இதர வழித்தடங்களோ ஏற்படுத்தும்போது உரிய துறையில் அனுமதி பெற வேண்டும்.
8. சாலைகள் அனைத்தும் பொதுச்சாலையாக பயன்படுத்தப்பட வேண்டும். அருகில் உள்ள நில உரிமைதாரர்கள் இவ்வழியாக செல்ல தடை ஏற்படுத்தக்கூடாது.
9. மேலும் நகர் ஊரமைப்புத்துறை இணை இயக்குநரின் நிபந்தனைகளை தவறாது கடைப்பிடிக்க வேண்டும்.
10. மேற்கண்ட நிபந்தனைகளை கடைபிடிக்க தவறும் பட்சத்தில் தங்களது அனுமதியினை எவ்வித முன்னறிவிப்பின்றி ரத்து செய்யப்படுவதுடன் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

V. மங்களசுந்தரி
தலைவர்
ஊராட்சி மன்றம்
எல்லைநாயக்கன்பட்டி

பெறுநர்.

திரு. C.கிருபாகரன்,

த/பெ. செல்லத்துரை
17B மணி நகர், *3* வது தெரு
தூத்துக்குடி

நகல்:-

நகர் ஊரமைப்புத்துறை இணை இயக்குநர் (பொறுப்பு)
மாவட்ட நகர் ஊரமைப்புத்துறை அலுவலகம்
தூத்துக்குடி